முருகப்பெருமான் துணை

**மகான் ராகுபகவான் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.09.2022, சனிக்கிழமை

1. ஆறுமுகனார் அவதார வடிவே
அரங்கமகானாய் கலி தன்னில்
மாறுதலை உலகோர்க்கு செய்ய
மாதவசியாய் வந்த தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
ஆசிபட சுபகிருது யாளி திங்கள்
அறிவிப்பேன் முப்பானீர் திகதி காரிவாரம்

(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 32 நாள், 17.09.2022 சனிக்கிழமை)

3. வாரமதில் ராகுபகவான் யானும்
வையகம் பாதுகாப்புற உரைப்பேன்
சோரமிலா ஞானவான்கள் படையை
சுத்தநெறி வழி அரங்கன் படைக்க
4. படைக்கவே உயர் மார்க்கம்தன்னை
பாருலகோர் தடையற ஏற்றுவர
பீடை சோடை நச்சுக்கிருமி வழி
பிரச்சினை பேரிடர் அனுகாத வண்ணம்
5. வண்ணமுடன் சகல பாதுகாப்பும்
வையகத்தில் பெற்று சிறப்பர்
அண்ணலின் அருளமுதை உண்ண
ஆரோக்கியம் ஆயுள்கூடி வாழ்வர்
6. வாழ்வினில் நாக தோடமிடரால்
வாழ்க்கை அமையா மன்றல் மேவி
தாழ்வான நிலை கொண்டவரெல்லாம்
தவராஜன் பிரணவக் குடிலை நாடி
7. நாடியே திருவடி தீட்சை தன்னை
ஞானி அரங்கனிடம் ஏற்று
தேடியே ஞானிகள் பூசை செய்து
தேசிகனார் வழிகாட்டும் அன்னதான
8. அன்னதான சேவை தன்னை
அகிலமெங்கிலும் பரப்பிவர
நன்னயமாய் இறை ஆற்றல் கூடி
ஞாலமதில் ஞானவான்கள் படைக்கும்
9. படைக்கும் உயர் சீடர்களாக
பாலதண்டாயுதன் அருள் பெற்ற
படைகளாக ஞானிகள் ஆகவே
பாருலகில் அற்புதம் காண்பர்

10. காண்கவே கலியிடர் வெல்லும்
கந்த வேலனின் உயர் சபை
மேன்மை கூடிய பிரணவக்குடிலாகும்
முருகப்பெருமானின் ஏழாம்படைவீடு ஆகும்

11. ஆகவே அரங்கமகானின் அருள்வழி
அறம் வழி சிறந்த வழியென
செகத்தார் வணங்கி வருகவே
சித்திமிகு கண்டு தேறுவர்
அருளாசி முற்றே

–சுபம்–